DEPOSITION OF WITNESS

In the Court of District Munsif Cum Judicial Magistrate Court,Uthukottai.

C.C. No. 9 of 2019

Prosecution witness : LW - 7/ PW - 7

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ஏழுமலை | Caste | : | |
| Fathers Name | : | முருகன் | Calling | : | |
| Village | : | செங்கரை | Religion | : | |
| Taluk | : | | Age | : | 44 |

(Accused Called present)

solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.02.2024

முதல் விசாரணை நேரம் காலை 1.15

1. நான் 9ம் வகுப்பு வரை படித்துள்ளேன். தமிழ்நாடு போக்குவரத்து கழகத்தில் ஒட்டுநர்ஆக பணி செய்து வருகின்றேன்.

2. கடந்த 2015ம் வருடம் மாதம் தேதி ஞாபகம் இல்லை. காலை சுமார் 8.45 முதல் 9.45 இருக்கும் சுளமேணிக்கு இடையில் விபத்து நடைபெற்ற இடத்தில் காயம் பட்ட நபருக்கு உதவி செய்தேன். அப்போது சம்பவ இடத்தில் இருந்து போலீசார் சாட்சிக்காக என்னிடம் கையொழுத்து கேட்டார்கள் நான் போட்டுக்கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

குறுக்கு விசாரணை:

3. சம்வம் நடைபெற்ற அன்று அங்கு தான் இருந்தீர்களா என்றால் நான் அப்போது தான் இருசக்கர வாகனத்தில் வந்தேன்.

4. சம்பவம் நடைபெற்ற இடத்தில் மக்கள் கூட்டம் இருந்தாதா என்றால் இருந்தது சுமார் 15 நபர்கள் இருந்தார்கள்.

5. விபத்தில் பாதிக்கப்பட்ட நபர்கள் 3பேர் இருந்தார்கள் என்றால் சரிதான்.

6. அந்த சமயத்தில் பொது மக்களை தவிர வேறு யாராவது இருந்தார்களா என்றால் போலீசார் இருந்தார்கள்.மறுநாள் அந்த இடத்திற்கு வரவில்லை என்றால் சரிதான்.

7. மறு நாள் நான் அந்த இடத்திற்கு செல்லவில்லை. சம்பவத்தின் மறுநாள் நான் யாரிடமும் எந்த கையொப்பமும் போடவில்லை என்றால் சரிதான்.

8. நிவாஷ் என்பவர் என்னுடன் கையொப்பம் செய்தார். என்னிடம் கையொப்பம்

வாங்கும் போது தட்டச்சு செய்த தாளில் வாங்கினார். என்னிடம் கையொப்பம் வாங்கும் போது சுமார் 8.45மணி இருக்கும்.

9. நான் கையொப்பம் சம்பவம் நடைபெற்ற சாலையில் போட்டேன். நான் விபத்து நடைபெற்ற அன்றே கையொப்பம் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ள போதும் ஆனால் காவல் துறையினர் அடுத்த நாள் கையொப்பம் செய்தாதக நான் கையொப்பம் அடுத்த நாள் கையொப்பம் செய்ததாக காவல்துறையினர் பொய்யாக கூறுகின்றார்கள் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது விபத்து நடைபெற்ற அன்றே தான் கையொப்பம் செய்தேன்.

10. என் முன்னிலையில் ஏதேனும் தட்டச்சு செய்தார்களா என்றால் போலீசார் ஏற்கனவே தயாரித்து வைத்த தாளில் தான் கையொப்பம் போட்டேன். என் முன்னிலையில் வரைபடம் தயார் செய்தார்கள்.

11. விபத்து நடைபெற்றதாக சொல்லப்படும் இடம்இரண்டு வாகனங்கள் சொல்லும் அளவுக்கு அகலமான சாலை என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

விசாரணை முடிவுற்ற நேரம் 1.30